Source: *Tamil Murasu,* p2
Date: 19 January 2016

சான்: சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே நல்ல அரசாங்கம்

சிங்கப்பூரர்களின் வாழ்க்கையை மேம்படுத்தி சிங்கப்பூருக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே நல்ல அரசாங்கம் என தொழிலாளர் இயக்கத் தலைவரும் பிரதமர் அலுவலக அமைச்சருமான சான் சுன் சிங் கூறியுள்ளார்.

அதற்கு, நம்பிக்கை, மரியாதை, பணிவு ஆகியவற்றால் மட்டுமே அடையக்கூடிய கூட்டு நடவடிக்கை, பொறுப்பு, தலைமைத்துவம் ஆகியவை தேவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொள்கை ஆய்வுக் கழகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் 'சிங்கப்பூர் பெர்ஸ்பெக்டிவ்' கருத்தரங்கின் இவ்வாண்டு நிகழ்ச்சியில் திரு சான் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

SG100 பயணத்தை நாடு தொடங்கியிருக்கும் இவ்வேளையில் சிங்கப்பூரராக இருப்பதற்கான அர்த்தம் பற்றிய கருத்துகளைச் சேகரிக்கும் நோக்கில் இவ்வாண்டுக்கான கருத்தரங்கு, தேசிய உறுதிமொழியின் முதல் சொல்லான 'நாம்' என்பதைக் கருப்பொருளாகக் கொண்டிருந்தது.

கலந்துரையாடலில் பங்கேற்ற 800 பேரிடையே பேசிய திரு சான், சமூகப் பன்முகத்தன்மையுடன், படித்தவர்களான, அரசியல் ஆர்வம் மிக்கவர்களான குடிமக்களுக்கு சிங்கப்பூர் எவ்வாறு சிறந்த நடைமுறை ஆட்சியை வழங்க முடியும் என்பது குறித்து விவாதித்தார்.

சரியான மதிப்புகள், திறன்கள் ஆகியவற்றுடன் நாட்டுக்காக உழைக்கும் சிறந்தவர்களை நாட்டின் எதிர்காலத்துக்காக தொடர்ந்து முன் நிறுத்துவதே சிறந்த ஆட்சி முறை என்றார்.

மக்களின் குறிக்கோள்களுடன் ஒத்துப்போகக்கூடிய, விரைவாகவும் தீர்மானமாகவும் செயல்படக்கூடிய, விளைவுகளை நிர்வகித்து, அனுசரித்துப்போகக் கூடியதே சிறந்த ஆளுகையின் மாதிரி எனக் குறிப்பிட்ட திரு சான், "மக்கள் செயல்கட்சி எப்போதும் நிலைத்திருக்குமா என்பதல்ல; நமது அக்கறை சிங்கப்பூர் எப்போதும் நிலைத்திருக்குமா என்பதே," என்றும் சொன்னார்.

சிங்கப்பூரின் தேசிய உறுதிமொழியில் குறிப்பிட்டுள்ளது போன்ற 'ஒன்றுபட்ட மக்கள்' எனும் நாட்டின் குறிக்கோளை அடைவதற்கு அனைவரையும் உள்ளடக்கிய அரசியல், கொள்கைகள் ஆகியவையே வழிநடத்தும் என நேற்றைய கருத்தரங்கில் பேசிய தற்காலிக கல்வி அமைச்சர் (பள்ளிகள்) இங் சீ மெங் கூறினார்.

"இவை மிகுந்த கவனத்துடன் வேண்டுமென்று உருவாக்கப்பட்ட நடைமுறைக் கொள்கைகள். அனைவரும் ஒன்றாக வாழ, வேலை செய்ய, விளையாட பொதுவானவற்றை நமது அரசியல் உருவாக்கியுள்ளது. நம்மிடையே இருக்கும் வேறுபாடுகளை மதித்து, பேதமின்றி பொதுவானவற்றைத் தொடர்ந்து கட்டிக்காக்க வேண்டும்," என்று திரு இங் கூறினார்.

கொள்கைகள் காலத்துக்கேற்ப மாறுதலை அடைந்தாலும் அதிகரித்துவரும் வாதங்கள், வருமான சமத்துவமின்மை, கலப்புத் திருமணங்கள், குடிநுழைவு போன்ற சிக்கலான அம்சங்கள் காரணமாக முக்கியக் கூறுகளான கல்வி, தகுதிக்கு முன்னுரிமை, எந்த ஒரு சிங்கப்பூரரையும் பின்தங்கவிடாத தன்மை போன்றவற்றில் மாற்றம் இருக்கக் கூடாது என்றார் அமைச்சர் இங்.

காலப்போக்கில் புதிய குடிமக்களும் நிரந்தரவாசிகளும் நமது சமூகத்துக்கு அதிகம் பங்களிக்கக்கூடும் எனவும் நாம் சரியான பாதையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்காலிக கல்வி அமைச்சர் (உயர்கல்வி, திறன்கள்) ஓங் யி காங், நிதியமைச்சர் ஹெங் சுவீ கியட் ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.